ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

संसाराब्धि सुतधनयुवत्याख्यनक्रादिराज-
ज्जन्तुव्रातैः कलितमनिशं पारशून्यं कराळम् ।
निर्मायास्मिन् सकलजनतां निर्दयं पातयित्वा
सानन्दं त्वं विहरसि सदा युक्तमेतत्किमीश ॥

𑌸𑌂𑌸𑌾𑌰𑌾𑌬𑍍𑌧𑌿𑌂 𑌸𑍁𑌤𑌧𑌨𑌯𑍁𑌵𑌤𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌨𑌕𑍍𑌰𑌾𑌦𑌿𑌰𑌾𑌜
𑌜𑍍𑌜𑌨𑍍𑌤𑍁𑌵𑍍𑌰𑌾𑌤𑍈𑌃 𑌕𑌲𑌿𑌤𑌮𑌨𑌿𑌶𑌂 𑌪𑌾𑌰𑌶𑍂𑌨𑍍𑌯𑌂 𑌕𑌰𑌾𑌳𑌮𑍍 ।
𑌨𑌿𑌰𑍍𑌮𑌾𑌯𑌾𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌸𑌕𑌲𑌜𑌨𑌤𑌾𑌂 𑌨𑌿𑌰𑍍𑌦𑌯𑌂 𑌪𑌾𑌤𑌯𑌿𑌤𑍍𑌵𑌾
𑌸𑌾𑌨𑌨𑍍𑌦𑌂 𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌹𑌰𑌸𑌿 𑌸𑌦𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍇𑌤𑌤𑍍𑌕𑌿𑌮𑍀𑌶 ।

புத்திரன், பொருள், ஸ்திரீ, என்று பெயர்கொண்ட முதலை முதலான துஷ்டப் பிராணிகளால் நிரம்பியதும் பயங்கரமாயும், கரையற்றதுமான ஸம்ஸாரமென்னும் கடலை உண்டுபண்ணி அதில் ஸகல ஜனஸமூகங்களை அற்பங்கூட தயவில்லாமல் விழும்படி செய்து ஹே ஈஸ! ஹே பரமேசுவர எப்பொழுதும் ஆனந்தமாக நீர் விளையாடுகிறீர். இது உமக்கு உசிதமாகத் தோன்றுகிறதா?

ஸகல பிராணிகளுக்கும் கொடிய கஷ்டத்தைக் கொடுக்கக்கூடிய ஸம்ஸாரமென்கிறபெரிதான ஸமுத்திரத்தையுண்டுபண்ணி அதில் எல்லாப் பிராணிகளையும் விழும்படி செய்து ஒருநாளும் கரையேற்றமில்லாமல் பிறப்பிறப்பென்றும் கொடிய நோயால் அடிக்கடி வருந்தும் ஜனங்களைச் சற்றும் கவனியாமல் நீர் மாத்திரம் ஆனந்தமாய் தாண்டவம் புரிந்து சுகித்திருப்பது எங்ஙனம் உசிதமாகும்? கூடியசீக்கிரம் எங்களையும் இந்தக்கஷ்டத்திலருந்தும் நிவர்த்தியடையும்படி செய்து சுகித்திருக்கும்படி அனுக்கிரஹிக்கவேண்டுமென்று ஒரு பக்தர் ஸ்ரீ பகவானிடம் வேண்டுகிறார்.

சுபம்!

உபபத்திராதிபர்.

## லாலாஜியும் மனுஸ்மிருதியும்.

(218-வது பக்கத்தொடர்ச்சி)

கிரகஸ்தாச்ரமத்திலோ

காலையில் 4 மணிக்கு எழுந்திருக்கவேணுமென்றும் அதிலிருந்தும் 12-மணிவரையில் பலவிதமான வைதிக கர்மாக்களை அனுஷ்டிக்கும்படி ஒவ்வொரு தினமும் இந்த மாதிரி நிர்பந்தத்தைக் கொடுத்துப் பிறகு மாலையிலும் பல தர்மங்களை யனுஷ்டிக்கும்படி நிர்பந்தம் செய்திருக்கிறார்கள். உலகிலுள்ள விஷயங்களைக் கவனித்து அதிக சிரமப்படாமல் சுகமாயிருப்போமென்று நினைப்பதற்கில்லை. மேலும் தங்கள் ஸ்திரீகளுக்கு வேதாத்தியயனம் கூடாதென்றும் கண்டவிடங்களில் தாமாகச் செல்லக்கூடாது என்றும் பல நியமங்களையும் கொடுத்திருக்கிறார்கள். பின்னும் ஆகாரம் செய்வது 1-க்குப்போவது முதற்கொண்டு பல நிர்பந்தங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இன்னும் பல நியமங்களால் மூச்சுக்கூட ஸ்வதந்திரமாய் விடமுடியாமல் மனுஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறதே. இந்தக் கஷ்டங்களை எல்லாம் ஏன் மாத்திக்கொள்ளக்கூடாது? தங்கள் இஷ்டம்போல் ஒரு காரியத்தைச் செய்ய சக்தி வாய்ந்தவர்கள் தாங்கள் கஷ்டத்தை யடையவேண்டுமென்று நினைப்பார்களா? பிறர்களுக்குத் தாம் மேம்பட்டவர்கள் என்று மாத்திரம் எழுதிவைப்பதில் யாதுபயன். தாம் அநுபவிக்க வேண்டிய கஷ்டமான காரியங்களையன்றோ முந்தி விலக்கிக் கொள்ளவேணும், இவர்களாக எழுதிவைத்திருந்தால் இவ்வித நிர்பந்தங்களைத் தங்களுக்குக் கொடுத்துக்கொள்வார்களா. இவ்விதம் கஷ்டப்பட்டுத் தாங்கள் கர்மானுஷ்டானங்களை நியமப்படி செய்தால் யாது பயனை அடைவார்களோ அந்தப் பயனையே ஒரு விதப் பிரயாஸையுமில்லாமல் சூத்திரர்களும் அவர்களுக்கு விதிக்

கப்பட்ட மிகவும் அற்பமான ஸ்வதர்மத்தை அனுஷ்டித்தால் அடைகிறார்களென்று கூறுவார்களா? க்ஷத்திரியர்களைப்பற்றிக் கூறுமிடத்தில்

> इन्द्रानिलयमार्काणामग्नेश्च वरुणस्य च ।
> चन्द्रवित्तेशयोश्चैव मात्रा निर्हृत्य शाश्वतीः ॥ म 7. 4.
>
> இந்த்ராநிலயமார்க்காணாமக்நேஶ்ச வருணஸ்ய ச ।
> சந்த்ரவித்தேஶயோஶ்சைவ மாத்ரா நிர்ஹ்ருத்ய ஶாஶ்வதீ: ॥ ம.7.4

இந்திரன் முதலான திக்பதிகளுடைய அம்சங்களால் அரசர்கள் சிருஷ்டிக்கப்படுகிறார்களென்றும்

> बालोऽपि नावमन्तव्यः मनुष्य इति भूमिपः ।
> महती देवता ह्येषा नररूपेण तिष्ठति ॥ म 7. 8.
>
> பாலோऽபி நாவமந்தவ்ய: மநுஷ்ய இதி பூமிப: ।
> மஹதீ தேவதா ஹ்யேஷா நரரூபேண திஷ்டதி ॥ ம.7.8

அரசன் வயதில் சிறுவனும் மானிட உருவத்துடன் இருந்த போதிலும் அவனை அவமதிக்கக்கூடாது. மிகவும் பூஜ்யமான சிறந்த தேவதையானது மனுஷ்யரூபமாக விளங்குகிறது என்று மன்னனைப் போற்றியிருக்கிறது. தங்களுக்கு மாத்திரம் பெருமையை எதிர்பார்த்தவர்களாயிருந்தால் க்ஷத்திரியரை இவ்விதம் போற்ற முன்வருவார்களா? அன்றியும் நான்காவது அத்தியாயத்தைச் சற்று கவனித்தால் பிராமணர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கஷ்டங்களும் நியமங்களும் நன்கு விளங்கும். மனுஸ்மிருதியை அடிமுதல் பூராவும் உற்றுநோக்கின் பிராமணர்களை பல துறைகளிலும் தர்மமென்கிற பெயரைக்கூறி ஹிம்ஸிப்பதற்காக ஏற்பட்டிருக்கின்றதென்று நன்கு வெளியாகும். இக் கருத்தையே மற்றொரு மஹரிஷியும்

> ब्राह्मणस्य तु देहोऽयं नोपभोगाय कल्पते ।
> इह क्लेशाय महते प्रेत्यानन्तसुखाय च ॥
>
> ப்ராஹ்மணஸ்ய து தேஹோऽயம் நோபபோகாய கல்பதே ।
> இஹ க்லேஶாய மஹதே ப்ரேத்யாநந்தஸுகாய ச ॥

பிராமணஜன்மாவானது, இப்புவியில் சொல்லவொண்ணாத கஷ்டங்களைத் தம் சரீரத்தால் அனுபவிப்பதைத் தவிர்த்து உலகசுகத்

தை அனுபவிப்பதற்கல்ல: இங்கு மிகவும் கஷ்டத்தை அனுபவித்துப் பிறகு லோகாந்திரத்தில் அதிகமான சுகத்தைப் பெறுகிறது என்று ஸ்பஷ்டமாய் கூறியிருக்கிறார். ஆகையால் பலர்களாலும் மதிக்கத்தகுந்த பெருமை வாய்ந்த பெருந்தன்மையிலிருப்பவர்களும் அற்பமதி. அஹங்காரம், அசூயை முதலிய கெட்ட குணங்களுக்கிருப்பிடமான சில ஜனங்கள் ஒன்றையும் உற்று நோக்காமல் பரதூஷணையில் பயமில்லாமலும் பாபம் புண்யமென்கிற பகுத்தறிவில்லாமலும் தம் மனம்போனபடியெல்லாம் தாறுமாறாய் உபன்யாஸ மேடைகளிலும் பேபர்களிலும் மஹான்களான மஹரிஷிகளையும் அவர்களாலியற்றப்பட்ட மனுஸ்மிருதி முதலான அரிய நூல்களையும் நிந்திப்பதுபோல் இவர்களும் தென்தேயத்திலுள்ள ஸாதுக்களான பிராமணர்களை அனாவச்யமாகத் தூஷிக்க முன்வந்திருப்பது சற்றும் பொருத்தமாகத் தோன்றவில்லை. யார் எவ்விதம் சொன்னாலும் பிராமணர்கள் மௌனம் ஸாதிப்பதைத் தவிர்த்து மறுமொழிகூற முன்வரமாட்டார்கள். ஆனாலும் அபாண்டமாய் பிறர்பேரில் குறைகூற முன்வருகிறவர்கள் கடவுளொருவர் உண்டென்றும் அவரவர்கள் செய்கைக்குத் தகுந்த பலத்தை அவர் அளிக்கவல்லவரென்றும் இனியாகிலும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு விஷயங்களை வெளியிடுவது நலமென்பதை அறிவித்து இவ்விஷயத்தையும் இத்துடன் பூர்த்தி செய்துகொள்ளுகிறேன். சுபம்.

உபபத்திராதிபர்.

---

## ஜலத்தின் சுத்தியும் அதை உபயோகிக்கும் விதமும்.

(226-வது பக்கத்தொடர்ச்சி.)

பூசுத்தி, பூதசுத்தி, சரீரசுத்தி, ஸ்தலசுத்தி, பாத்திரசுத்தி, திரவ்யசுத்தி, மண்டபசுத்தி, பிம்பசுத்தி, அந்த: சுத்தி முதலியசுத்தி வகைகள் எவ்வளவோ இருக்கின்றன அவைகளுக்கு ஜலமே அவசியமானது. இவைகளில் ஒரு சுத்தியை எடுத்துக்கொள்வோம். சரீரசுத்தி என்பது ஸ்நாநம், அதாவது ஜலத்தில் இறங்கி நீராடுவது பராசரமஹா முனிவர் அருளிச்செய்த ஸ்மிருதியில்

**सन्ध्या स्नानं जपो होमो देवतानां च पूजनम् ।**
**आतिथ्यं वैश्वदेवं च षट्कर्माणि दिने दिने ॥**

𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌸𑍍𑌨𑌾𑌨𑌂 𑌜𑌪𑍋 𑌹𑍋𑌮𑍋 𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌪𑍂𑌜𑌨𑌂।
𑌆𑌤𑌿𑌥𑍍𑌯𑌂 𑌵𑍈𑌶𑍍𑌵𑌦𑍇𑌵𑌂 𑌚 𑌷𑌟𑍍𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌦𑌿𑌨𑍇 𑌦𑌿𑌨𑍇 ।

என்றார். இதில் ஸந்தியாஸ்நாநம் முதலிய ஏழு காரியங்களைச் சொல்லி ஆறாகக் கணக்கிட்டிருக்கிறார். அதாவது ஸந்தியும் ஸ்நானமும் ஒரு கார்யமானதாலும், அதுவும் ஜல ரூபமாய் செய்ய வேண்டிய கார்யமானதாலும், ஒன்றுக்கொன்று ஆச்ரயமுள்ளதானதாலும் அப்படிச் சொன்னார். (தொடரும்)

பனயப்பட்டி வேங்கடேசய்யர்,

---

# தென்னாற்காடுஜில்லா மஹாஸபை.

விழுப்புரம் வைச்யர்களின் பொதுசத்திரத்தில் 20—5—28 பகல் 2-30 க்கு பால்யவிவாஹவயதுமசோதா கண்டனக்கூட்டம் கூடிற்று.

ஸபாரம்பத்தில் மங்களவாத்யத்துடன் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் ப்ரஸாதம் கொண்டுவரப்பட்டு அங்குள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணபடங்களுக்குப்பூஜாதீபாராதனங்களுடன் தரிக்கப்பட்டு ஸபா ஆரம்பம் செய்யப்பட்டது. பல தாலூகாக்களிலுமிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தனர். விஜயம் செய்திருந்தவர்கள் ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான்கவிரத்னம் ப. பஞ்சாபகேசசாஸ்திரிகள், பிரம்மஸ்ரீ வளவனூர் கச்சபேச்வர சாஸ்திரிகள், ஸுந்தர சாஸ்திரிகள், V. T. ராமஸ்வாமி அய்யர் B A, V. R. கிருஷ்ணஸாமி அய்யர், வக்கீல் V. ஜெயராமய்யர், B A, L T., O. R. ரகுபதி சாஸ்திரிகள், B A, B L, திண்டிவனம் ஸ்ரீனிவாஸராகவாசாரியார், B. A, B. L, டிரயினிங் ஸ்கூல் ஹெட்மாஸ்டர் V. M. ஸுப்பிரமணிய அய்யர், திருக்கோவிலூர் வக்கீல் C, V. நாரரயணஸாமி அய்யர், U. P. கோபாலாசாரியார், M. S. வெங்கடராமய்யர் வக்கீல், பாலகுருநாத செட்டியார், குண்டுராவ் வக்கீல் சேஷாத்திரி அய்யங்கார், தாசில்தார் ஸ்ரீமான் ராஜமாணிக்கம்பிள்ளை, வானூர் டிப்டி தாசில்தார் மகாலிங்கம்பிள்ளை, A. P. கோபால செட்டியார், கு. கோபி

செட்டியார், R திருவேங்கிடாசாரியார், V. ஜானகிராமய்யர், பண்டாபீஸ் முதலான முக்கியஸ்தர்களும், சுற்றுகிராமங்களிலும் தாலூகாக்களிலுமிருந்து பலர் விஜயம் செய்திருந்தனர். இரவு 7-மணிவரையில் பல பிரமுகர்களால் பிரசங்கிக்கப்பட்டு, கண்டனத் தீர்மானங்கள் கவர்னர், வைஸ்ராய் இவர்களுக்கு அனுப்பும்படிக்கும் ஷியார்களிடம் நேரில் தெரிவிக்க, கீழ்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டும் ஸபை இனிது நடந்தேறியது. இது விஷயமாம் V. T. ராமஸ்வாமி அய்யரும், V. ஜயராமய்யரும் மிகுந்த சிரமம் எடுத்துக்கொண்டு ஸ்ரீ ஜகத்குரு கருணைக்குப் பாத்திரமானர்கள் என்பது திண்ணம். இத்துடன் எனது பிரசாரவேலையை தென்னாற்காட்டில் பூர்த்திசெய்து அடுத்தபடி சேலம் ஜில்லாவிற்குச் செல்லுகிறேன். ஸ்ரீ குருபாதமே துணை.

அங்குள்ள கனவான்களும் இவ்விதமே உதவி புரிவார்கள் என்று நம்புகிறேன்.

## தென்னாற்காடுஜில்லா பால்யவிவாஹவயதுமசோதா கண்டன மஹாஸபையில்டெபுடேஷன்செல்லத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரமுகர்கள். (20—5—28.)

ஸ்ரீமான்கள்

R. சீனுவாஸ அய்யங்கார் M. L. C. B. A. B. L. வைக்கீல் புதப்பாளயம் கடலூர் N. T.

T. E. சடகோபாசாரியார் வக்கீல் கடலூர்

V. T. ராமஸ்வாமி அய்யர் B. A. வளவனூர்

O. R. ரகுபதிசாஸ்திரிகள் B. A. B. L. வைக்கீல் கடலூர்

A. P. கோபாலசெட்டியார் விழுப்புரம்

C. V. நாராயணஸாமி அய்யர் வைக்கீல் திருக்கோவிலூர்

R. திருவேங்கிடாசாரியார் வைக்கீல் விழுப்புரம்

மேற்கண்ட கனவான்கள் மகாஸபையில் எல்லோராலும் ஏகமனதாய் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

"கிருஹ்யக்ஞ" வி. உமாமகேச்வரசாஸ்திரி.
காட்டுமன்னார்கோவில்.

# காலத்தின்கதி.

(220-வது பக்கத்தொடர்ச்சி.)

7. ஸ்திரீகள் மகாநாடாம் அதைக்கேளுங்கள். ஆண்மக்கள் மட்டும் தனியே என்னப் பிரயாஸைப்படினும் இந்தியாவுக்கு விடுதலை ஏற்படப்போவதில்லை என்றும் ஆண்மக்களுக்குள்ள ஸர்வ ஸ்வாதந்திரங்களும் பெண்மக்களுக்கும் அளிக்கப்படுகிறவரையில் ஸ்வாராஜ்யமென்பது வீண்பேச்சாகவே முடியுமென்று நம்ஸகோதரிகள் கர்ஜிக்கிறார்கள்.

8. தொழிலாளர் மகாநாடு அவர்கள் என்ன சொல்கின்றனர் கவனியுங்கள். உலகிலுள்ள யாவரும் தொழிலாளர் மகாநாட்டு அங்கத்தினராகச் சேராதவரை ஸ்வாராஜ்யம் ஸித்திக்காதென்றார்கள்.

9. வங்காளத்தலைவர்கள் கூட்டம் அங்கு பேசிய வங்காளத்தலைவர்களோ வங்காளம்தான் இந்தியாவுக்கு ஸ்வாராஜ்யத்தைத்தேட அதிக உயிர்களையும் ரத்தத்தையும் சிந்திவருகிறதென்றும் சிறையில் அடைபட்டுக் கிடக்கும் வங்காளயுவர்களை வெளிப்படுத்திக்கொண்டுவாராதவரையில் ஸ்வாராஜ்யத்தின்பொருட்டுக் காங்கிரஸ் செய்யும் தீர்மானம் வெறும் காயிதத்தீர்மானமாகவே இருக்குமென்றுகதறினர்.

10. ஆதித்திராவிடர்களும் இதர ஒடுக்கப்பட்ட வகுப்பினரும்கூடிய மகாநாட்டில் சர்வஜாதிகளுக்கும் சமஉரிமை அளிக்கப்படுகிறவரையில் ஸ்வாராஜ்யம் இந்தியாவுக்குத்தற்போதே கிடைப்பதாய் இருந்தாலும் குறுக்கே விழுந்துமறிப்போமென்று சபதம் செய்தனர்.

11. சுயமரியாதை மகாநாடு இவர்கள் தீர்மானமாவது மனுஸ்மிருதி ராமாயணங்களைக்கண்ட கண்டவிடத்துத் தீயிலிட்டுப்பொசுக்கி பிராமணர்களை ஓட்டி அடித்துவிட்டால் தேசத்திற்கு ஸ்வாராஜ்யம் கிடைத்து விடுமென்பது.

12. ஆசாரசீர்திருத்த மகாநாடு நம் பிராசீன ஆசாரங்களை ஓட்டி நமதிஷ்டப்படி அமைத்துக்கொண்டு ஒத்துவாழ்ந்தால் ஸ்வாராஜ்யம் கிட்டி விடும்.

13. சங்கீதமகாநாடு இதில் ஸ்வாராஜ்யம் கிட்டுமென்பதைப் பற்றி இல்லே.

14. அஹிம்ஸாதர்மமகாநாடு இவர்கள் கோ ஸம்ரக்ஷணம் செய்யவேண்டும் மாக்கறி உபயோகிக்கவேண்டும். எல்லோரும் இதில் அங்கத்தினராய்ச் சேர்ந்து ஒத்துழைத்தால் ஸ்வராஜ்யம் தாஞகவே வரும்.

15. வர்ணுசிரமமகாநாடு இவர்கள் ஸனுதன தர்மத்தை தேச ஜனங்கள் கைவிடத்தொடங்கிய நாள் முதல்தான் பாராஜ்யம் ஏற்பட்டதென்றும் தர்மம் முன்போல் தலையெடுக்கும்போது ஸ்வாராஜ்யம்தாஞக ஸித்தியாகுமென்றும் கூறினர்.

புத்திமான்களே! இங்கு பற்பல வேறு அபிப்பிராயங்களோடு பேசியவர்கள் எல்லோரும் யார் எல்லாம் நம் இந்தியமக்களேயல்லவா, ஒரேமக்களே இவ்விதம் பிளவுபட்டுப்பேசினுல் நம் தேசத்தில் ஒற்றுமைக்கு இதுவா வழி ராஜாங்கத்தார் நமது ஒவ்வொரு கூக்குறலேயும் பத்திரிகைகளின் மூலமாய் அறிந்திருக்கமாட்டார்களா, அறிந்து என் செய்வார்கள், எவ்விதப்பேச்சை நம்பி அவர்கள் நமக்கு ஸ்வாதீனத்தை அளிக்க முடியும் நண்பர்களே! பிராம்மணர்களுக்கும் அப்பிராமணர்களுக்கும் த்வேஷம், ஆதி திராவிடர்களுககும் ஸவர்ண ஹிந்துக்களுக்கும் த்வேஷம் ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும்த்வேஷம் பிள்ளைகளுக்கும் பெற்றேர்களுக்கும் த்வேஷம் மாணவர்கட்கும் உபாத்தியாயர்கட்கும் த்வேஷம் யஜமானனுக்கும் ஸேவகனுக்கும் த்வேஷம் மேல்அதிகாரிகளுக்கும் கீழ் அதிகாரிகளுக்கும் த்வேஷம் ஆர்யர்களே இவ்வளவும் நம் தேயத்தில் தலையாட்டிக்கொண்டு அட்டகாஸம் செய்யவில்லையா இவ்வளவையும் அடக்காமலே ஸ்வாராஜ்யம் விரும்புவீர்களா விரும்பினுல் இவ்வளவு ஓட்டை நம்மிடமிருக்கிறது தெரியாதா? இவ்வளவையும் ஸமாதானம் செய்ய ஸமரஸமான வழியை யாராவது கூறினரா? இவ்வேற்றுமை முன்னிருந்ததா? இவ்விதம்முன் இல்லாமலிருந்ததற்குக் காரணம் இன்னதுதானென்று கண்டு கொண்டீர்களா?காண முயற்சித்தீர்களா? இவ்விதம் இதுகாறும் விரோதமில்லாது காப்பாற்றிவந்தது நம் ஸனுதன தர்மமே இதை மறுத்துக்கூற யாராலும் முடியாது. அதைக் கைவிட்டதுதான் கெடுதிக்குக் காரணம், அது போற்றப்பட்டிருந்த காலத்

தில் ஒருவிதக்கெடுதலும் நமக்கு ஏற்படவில்லை. இனி நம் மதத்திற்குப் பொருப்பாளர் யார் என்பதையும் அதற்குத் தற்காலம் நம்மால் நேர்ந்திருக்கும் துர்தசையையும் கவனிப்பாம்.

## மதத்திற்குப் பொருப்பாளர் யார்?

நான் முற்கூறியவாறு நம் மதம் இப்போதடைந்திருக்கும் துர்தசையைமட்டும் கவனித்து அதனை நிவர்த்திசெய்ய வழி தேடுவோம்.

முற்காலத்தில் நம் மதத்திற்கு ஆசார்யபுருஷனென்ற மகானைப் போற்றிவந்தோம். அவர் சொல்படியே நடந்து வந்தோம். இது நமக்குமட்டிலும் புதிதல்ல. மற்ற மதஸ்தர்களும் அவ்விதமே இப்போதும் இருக்கிறார்கள். பாருங்கள்! மகமதியர்கள் கிறிஸ்தவர்கள் தன் மதகுருவை மிகவும்போற்றி நடக்கின்றனர். அதுபோல் பண்டைகாலம்தொட்டு நம் மதத்தைக் காப்பாற்றவென்றே அவதரித்த பரமாசார்யர்களென்ற பீடாதிபதிகளுக்கு எவ்வளவு மரியாதை நாம் தற்காலம் கொடுத்திருக்கிறோம்? அவர்களுக்கு நாம் மரியாதையை உள்ளன்புடன் செலுத்திப் பாமதீனனை என்னைக்காப்பாறுங்களென்று த்ரிகாணசுத்தியாய்ப் பிரார்த்தித்து பரந்யாஸம் என்று சொல்வதுபோல்நம்பொறுப்பை அவர்களின் பாதாரவிந்தங்களிற்போட்டு உலக யாத்திரைக்கு வழி கேட்பவர்கள் எத்தனை பெயர்கள். நாம் கொஞ்சமேனும் அவர்களுக்கு மரியாதை கொடுக்காததாலேயே இவ்வுலகம்இக்கதிக்கு வந்ததென்பதைச் சற்று நிமிஷத்தில் அடியில் வரும் விஷயத்தால் அறியலாம்.

சற்றேறக்குறைய 80 வருடங்களுக்குமுன் காலங்களில் இப்போதிருக்கும் நிலையின் வாஸனையே நமது ஸமூகத்தில் இல்லாமலிருந்ததென்பதை நம்முள் உள்ள பல பிரிவுக்காரர்களும் ஒப்புக் கொள்வார்கள். அக்காலத்தில் நமது மதப்பற்றால் பிராமணப் பிராமணர்கள் ஸத்தியத்துடனும் விசுவாஸத்துடனும் நேசித்து, அண்ணனுக்குத் தம்பி மரியாதைபோல் நடித்து சுகித்திருந்தனர் பிராமணர்கள் கவலையின்றி சாஸ்திரங்களைக்கற்று அதை அப்பிராமண அரசர்களாலும், பிரபுக்களாலும் பிரகாசப்படுத்தச் செய்து கொண்டுவந்தனர். மதாசார்யர்களான மடாதிபதிகள் ஆங்காங்கு

தேசாடனம் செய்துகொண்டு வர்ணாசிரம தர்மத்தையும் ஆசாரங்களையும் கைவிடாது நடத்திவரும்படி தூண்டிவந்தனர். அக்காலத்தில் யாராவது மதத்திற்கு விரோதமான வழியில் நடந்தால் உடனே அவனை அந்தந்த கிராமத்திலிருக்கும் மடமுத்திராதிகளின் மூலம் ஸ்ரீ மடத்துக்கு விக்ஞாபித்து அவர்கள் கொடுக்கும் பகிஷ்காரத்திற்கும் பிராயச்சித்தத்திற்கும் உட்பட்டு நடப்பான். இதனால் மதம் சீர்கேடுக்கு வராமலிருந்தது.

தற்காலம் ஏதாவதொன்றுவதிருக்கிறதா. இவ்விதம் தவறுதலுக்குக் காரணம் யார் என்பதை ஆராய்ந்தறிய நாம் தலைப்படுவது முடியாத காரியம். அதனால் காரியசாதகமும் கிடைக்காது. அப்ராம்மணர்களைக் கேட்டால் எங்களை பிராமணர்கள் மோசம் செய்தார்களென்பார்கள்பிராமணர்கள் அப்பிராமணர்களைக்குறை கூறுவார்கள். இருவர்களுக்கும் மத்தியஸ்தனாய் ஒருவன் வர வேண்டாம். வேண்டுமானால் நாமிருவருமே மாத்ஸர்யத்தை ஒழித்து ஒருவரோடொருவர் கூடி விஷயத்தை விசாரித்தால் மூன்றும் மனிதனுக்குத் தெரியாமலே நாமே ஒற்றுமைப்பட்டு விடுவோம்.

இவ்விதம் தவறுதல் நேர்ந்ததன் காரணத்தை விசாரிப்பாம்.

बोद्धारो मत्सरग्रस्ताः प्रभवः स्मयदूषिताः ।
अबोधोपहताश्चान्ये जीर्णमङ्गे सुभाषितम् ॥

போத்⁴தாரோ மத்ஸரக்³ரஸ்தா: ப்ரபவ: ஸ்மயதூ³ஷிதா: ।
அபோ³தோ⁴பஹதாஶ்சான்யே ஜீர்ணமங்கே³ ஸுபா⁴ஷிதம் ॥

அறிந்த பண்டிதர்கள் பொறாமையாற் பிறனுக்கு உபதேசிக்கிறதில்லை. பிரபுக்களும் தன கர்வத்தால் கெட்டார்கள். ஆகவே சாமான்ய ஜனங்கள் அக்ஞானத்தாற் கெட்டார்கள். அதனால் சரீரத்தில் நல்லவார்த்தை என்பது ஜீர்ணமாய்விட்டது என்று பார்த்ருஹரி வாக்கியப்படியாவது காரணமிருக்கட்டும். இதிலிருந்து மதப்பிரசாரமும் மதத்தின்தத்துவமும் அதன் அளவிறந்த மகிமையும் வரவர மங்க ஆரம்பித்தது. ஜனங்களெல்லோரும் ஆங்கில பாஷையையே நம்பவேண்டியதாயுமாயிற்று. பால்யம் முதல் பஞ்சாக்ஷர. அஷ்டாக்ஷரோபதேசத்தோடு ஆரம்பிக்கும் தேசபாஷைப் பாடமும், ஸம்ஸ்கிருதபாடமும் துலைந்தது. A.B.

C. D. என்று திவ்யோபதேசம் ஏற்பட்டது. பால்யம் முதல் இப்படிப்பையே அல்லும் பகலுமாய்க் கதறும் நம் குழந்தைகளுக்கு மதவிஷயம் தெரியவழி ஏது. ஆயினும் நம் மதம் உயர்ந்த மதமென்றும் மட்டிலும் தெரிந்துகொண்டு ஆஸ்திக்யத்துடனிருந்தான். அக்காலத்தில் நம் மதோபதேசகனென்று யாராவது வந்து எதையாவது கூறினுல் அதை பக்தியுடன் கேட்டு உய்ய வேண்டுமென்று அவனை அண்டுபவர்கள் பலர். தேசபாஷையை முழுமையும் துலைத்து ஏப்பமிட்டுக்கொண்டு உத்யோகம் பெற்று வீட்டில்கூட தடபுடலாய் நடுநடுவே இங்கிலீஷைச் சேர்த்தே உளரிக்கொண்டிருக்கும் பிரபுக்களோ தேசபாஷையில் விஷயம் கூறும் பண்டிதோத்தமர்களிடத்தில் அலக்ஷிய புத்தியை மேன்மேலும் கொள்ள ஆரம்பித்து விட்டனர். இச்சமயம் பிரம்ம ஸமாஜம் என்று வேதத்தின் ஸாரமிதுதானென்று ஆங்கிலபாஷா மயக்கமுள்ள அவர்கள் முன்னிலையில் தாண்டவமாட வந்தது.

அதை நல்வரவு கூறி ஆதரித்தனர் சிலர். ஆர்யஸமாஜமென்று மற்றொன்று அதுவும் நமது வேத ஆதாரமுள்ளது தான் என்று பணிந்தார். மறுசாரார். பிர்மஞான சங்கமொன்று பெரிது. அதில் தலைவிரித்தாடினர் பலர். ஹிந்து மகாசபை ஒன்று இப்போது பலமாய் உலாவ ஆரம்பிக்கிறது. இதை நம்புகிற ஆஸ்திகரென்ற புரபு பலர். இவ்வளவு ஸபைகளும் இங்கிலீஷ் படித்த பெரிய பெரிய பிரபு ஆஸ்திகர்களால் கையாளப்பட்டு வருகின்றன. இவ்வளவுக்குள் ஏதாவதொன்றை நம்பாத இங்கிலீஷ் இந்து ஆஸ்திகர் கிடையாதென்பது மிகைக் கூற்றல் ஆகுமா. இவைகளில் நுழைந்த யாவருக்கும் ஒரே ஒரு தத்வம் மட்டிலும் மனதில் வேரூன்றி வளர்கிறது. அதாவது வேதம் அனாதி அல்ல. ஒவ்வொரு காலத்தில் முன்பின்னாய் உண்டாயது. வேதத்தில் உள்ள யாவும் பிரமாணமல்ல. சிலசில சேர்க்கப்பட்டிருக்கின்றன. காலத்துக்குத் தக்கபடி சிலவற்றை ஏற்கவும் சிலவற்றை நிராகரிக்கவும் வேண்டும். வர்ணாசிரம தர்மம் எக்காலத்திற்கும் ஏற்றதல்ல. நான்கு ஜாதியென்று கூறப்பட்டிருப்பதால் தீண்டாதவர்களென்று கிடையாது. எல்லோரும் ஓரிடம் கட்டிப் புரளவேண்டும் என்பதே. ஆகவே நம்மிந்தியாவிலுள்ள இந்தியர்கள் யாவரும் இதற்கு உட்பட்டு விட்டார்கள். ஆனால்

உட்படாத பலர் இவர்களைக் காட்டிலும் பன் மடங்கு பெருகிய வர்கள் ஏராளமாய் இருக்கிறார்கள். அத்தகைய எம்போன்றவர் கள் இருந்தும் இறந்ததுபோலிருக்கிறது. ஏனெனில் முக்கிய மாய் பண்டிதர்கள் பிராமணர்களும் அப்பிராமணர்கள் பலருமிரு ந்தும் எங்களை இந்தியர்களென்று கணக்கில் சேர்த்துக்கொண்டு இவர்கள் கேழ்கிறதே இல்லை. எங்கேயாவது நாங்கள் இத்த கைய ஸபையிற்போய்ப் பேச ஆரம்பித்தால் ஐயோ! அனாதி ஸித்தமான நம் மதம் இவ்வளவு கதிக்கு வந்து விட்டதா! நம் குலமணிகளின் புத்தி இவ்வாறு மாறிவிட்டதா! இவ்விதம் கேட் கவும் காலம் வந்துவிட்டதாவென்ற பரிதாபத்துடன் சற்று பட படப்புடன் பேசிவிட்டால் நம் பிரபுக்கள் அவ்விதம் பேசுவது அலௌகிகம் என்று உட்கார்த்திவிட்டு அவர் லோக நடவடிக்கை தெரியாதவர் பரமவைதிகம என்று ஸமாதானம் சொல்லிவிடுகிறார் கள். பரமவைதிகமென்பது மட்டிலும் எங்களுக்கு கௌரவமான பெயர். ஆனால் அதை உபயோகிக்கிறவருக்கும் கேட்கிற லௌ கிகர்கட்கும் மட்டிலும் மிகவும் இழிவென்று கருத்தாகிறது.

இவ்விதமெல்லாம் ஆனபடியால் இப்போது நமக்குப்பலித்த தென்ன. வேதசாஸ்திர மகிமை துலைந்தபடியால் லோகத்திற்குத் தற்காலம் ராஜாங்கமூலமாய் எற்பட்டிருக்கும் குறைகளை நீக்கிக் கொள்வதற்கென்று எற்பட்டு 42-வருடமாய் உலாவும் காங்கிரஸ் மகாசபையும், ஆதிநோக்க முழுமையும், துலைத்து ஏனைய பல பல சபைகள் ஏற்பட்டு இந்துமதத்தின் புனிதமான கொள்கைகளைக் களைந்தெறிவது போல் நம் மதத்தைச் சீர்குலைப்பதே தேச முன் னேற்றத்திற்கு முக்கிய காரணமென்று கைக்கொண்டது, சட்ட சபைகளில் லோகரீதியான குறைகளை விட்டொழித்து நம் மதத் தைச் சீர்திருத்துகிறோமென்று சீர்குலைக்கக் கிளம்பிவிட்டனர். நாம் என் செய்யலாம். நமக்கோவாயில்லை. இவர்கள் மூலம் நமக்குத் தெரியாமலும் நமக்குத் தெரிந்தும் சட்டம் செய்யப் பட்டன பல. அவற்றில் சிலவற்றை என் காதிற் பட்டதைத் தெரிவிக்கிறேன்.

(இன்னும்வரும்)

M. N, சுப்பிரமண்யசாஸ்திரியள்.